# 6. SAMATHUVAPURAM

## 6.9 2000–2001–சமத்துவபுரம் குடியிருப்பு அமைத்தல்–விரிவான வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.78 நாள் : 27.3.2000

படிக்க :

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நி.எ.4.) துறை அரசாணை (நிலை) எண்.171 நாள் 22.10.97
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நி.எ.4.) துறை அரசாணை (நிலை) எண்.43 நாள் 18.5.98
3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நி.எ.4.) துறை அரசாணை (ப) எண்.99 நாள் 12.6.98
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நி.எ.2.) துறை கடிதம் எண்.31262/நி.எ.2 / 97–27 நாள் 13.10.98
5. வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் கடித எண் 34206/கட்.1/98–2 நாள் 15.10.98
6. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நி.எ.2.) துறை அரசாணை (நிலை) எண்.124 நாள் 20.10.98
7. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நி.எ.2.) துறை கடித எண்.31262/நி.எ.2/97–29 நாள் 21.10.98
8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(நி.எ.2.) துறை கடிதம் எண் 4593/நிஎ.2/99–1 நாள் 25.2.99
9. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–10.) துறை அரசாணை (நிலை) எண்.66 நாள் 8.6.99
10. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–10.) துறை அரசாணை (ப) எண்.139, நாள் 14.7.99

9\. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கடிதம் எண் 50490/கட்.1/99–1) நாள் 3.12.99

10\. பொதுத் (சிறப்பு–அ) துறை, அரசாணை (வாலாயம்) எண்4762, நாள் 6.12.99

11\. ஊரக வளர்ச்சி (மதி2) துறை அரசாணை (நிலை) எண்.261 நாள் 20.12.99

12\. ஊரக வளர்ச்சித் (மதி2) துறை அரசு ஆணை (நிலை) எண் 4 நாள் 5.1.2000

13\. ஊரக வளர்ச்சித் (மதி2) துறை அரசு ஆணை (நிலை) எண்.5 நாள் 5.1.2000

14\. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.2525/2000/திட்டம் 2 நாள் 21.2.2000

**ஆணை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி தமிழகத்தில் அனைத்து சாராரும் ஒன்று சேர்ந்து குடியிருக்கும் வகையில, பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் உருவாக்கப்பட, பார்வை ஒன்றில் குறிப்பிட்டிருக்கும் அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து பல ஆணைகள் அரசால் இத்திட்டத்தின் சிறந்த செயல்பாட்டிற்காக அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த ஆணைகளை சம்பந்தப்பட்டவர்கள் செயல்படுத்துவது குறித்து அரசு கவனமாக ஆராய்ந்தது. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்தும் பெறப்பட்டது. அரசு, இத்திட்டத்தை மேலும் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக, விரிவான மேம்படுத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளை சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாமல் பின்பற்றுவதற்காக இணைப்பில் கண்டுள்ளவாறு வெளியிடுகிறது. இந்த மேம்படுத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகள், பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் தொடர்பாக அரசினால் பெளியிடப்பட்டுள்ள அனைத்து ஆணைகளையும் கருத்தில் கொண்டு பின்பற்றப்படல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலர்

**அரசாணை நிலை எண்.78 ஊ.வ.(மதி2) துறை, நாள் 27.3.2000**

**இணைப்பு**

**பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைத்தல் குறித்த அறிவுரைகள்**

இந்ததிய விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி தமிழகத்தில் சாதி மத பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் சமத்துவபுர திட்டம் அறிவிக்கப்பட்டது. இதன் தொடர்பாக, 1997–98, 1998–99 மற்றும் 1999–2000 ஆண்டுகள் முடிய தமிழ்நாட்டில் 150 பெரியார் நினைவு சமத்துவரங்கள் அமைக்கப்பட வேண்டும் எனறு திட்டமிடப்பட்டு, வீடுகள் கட்டுவதற்கு அதற்கென நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும், இந்தப் பணிகள் குறித்த காலத்திற்குள் முடிக்கப்படாமல், இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் மிகுந்த கால தாமதம் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான மாவட்டங்களில், 1998–99 ஆண்டிற்கான சமத்துவபுரங்கள் இதுவரையிலும் முடிக்கப்படாததோடு மட்டுமல்லாமல் 1999–2000 ஆண்டு சமத்துவபுரங்களுக்கான இடம் கூட இன்னும் தேர்வு செய்யப்படாமல் உள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் அரசு நிர்ணயித்த இலக்கை விரைந்து அடைவதற்கும், திட்டமிட்டு செயலாற்றுவதற்கும் கீழ்க்கண்டவாறு விரிவான அறிவுரைகள் இரு பிரிவுகளில் வழங்கப்படுகின்றன.

**பிரிவு–1**

**சமத்துவபுரம் அமைப்பது பற்றிய அறிவுரைகள்**

**1.1.** இடம் தேர்வு செய்தல்

சமத்துவபுரம் அமைய உள்ள இடங்கள் ஒரே சட்டமன்றத் தொகுதியிலோ, ஊராட்சி ஒன்றியப் பகுதியிலோ அல்லாமல், பரவலாக, மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் தேர்வு செய்யப்பட வேண்டும். இதில், அரசு புறம்போக்கு நிலங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். ஆனால், அதே சமயத்தில், குளம், வாய்க்கால், ஊரணி, கண்மாய் போன்ற ஆட்சேபணைக்கு உரிய நீர்நிலைப் புறம்போக்குகளைத் தவிர்த்தல் நலம். ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு நிலங்களைத் தேர்வு செய்வதன் மூலம் நில மாற்ற பிரேரணைகளுக்கான ஆணைகளைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதோடு, விவசாயத்திற்கும், நிலத்தடி நீர்மட்டத்திற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்காத இனங்களில், தகுதியான தனியார் பட்டா நிலங்களை நில எடுப்பு சட்ட நடவடிக்கை மூலமாகவோ அல்லது தனியார் பேரப்பேச்சு மூலமாகவோ கையகப்படுத்தலாம். புன்செய் நிலங்களே இதற்குத் தேர்வு செய்யப்பட வேண்டும். தவிர்க்க இயலாத இனங்களில் தேர்வு செய்யப்படும் நன்செய் நிலங்களுக்கு அதற்குரிய அரசாணை பெறப்பட வேண்டும். சமத்துவபுரத்தில், குடியிருப்புகள் அமையவிருப்பதால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காத இடமாகவும் , குடியிருப்புகளின் உபயோகத்திற்கு தேவையான நீர் கிடைக்கக்கூடிய இடமாகவும், கட்டிடங்கள் கட்டுவதற்கு தகுதியான இடமாகவும் இருத்தல் வேண்டும். நில எடுப்பு செய்வதற்கான தொகை ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறைகள் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஒதுக்கப்படும் நிதியிலிருந்து செலவிடப்பட வேண்டும். நில எடுப்பு/நிலமாற்றம் செய்தல், உட் பிரிவுகளுக்கு ஒப்புதல் பெறுதல், பட்டா வழங்குதல் போன்றவை அமைக்கப்பட வேண்டிய சமத்துவபுரத்தை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் மாவட்ட ஆட்சியர் எடுக்க வேண்டிய முக்கிய ஆரம்ப கட்ட பணிகளாகும்.

**1.2.** நில எடுப்பு / நில மாற்றம்

நில எடுப்பு மற்றும் நில மாற்றம் குறித்த இனங்களில் காலதாமதத்தினை தவிர்த்து, துரித நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் இதற்கான கால அட்டவணை பின்பற்றப்படல் வேண்டும். நில எடுப்பு இனங்களில் பெர்ட் (PERT) அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு செயல்படலாம். நில மாற்ற பிரேரணையை பொறுத்தவரை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கும், கோவில் புறம்போக்கு நிலங்களை பொறுத்தவரை இந்து சமய அறநிலையத் தனித்துறை ஆணையர் அவர்கன் அலுவலகத்திற்கும் இதற்கென தனியே அலுவலர்களை அனுப்பி வைத்து இவ்வலவலகங்களில் தேவைப்படும் மேல் விபரங்களை பெற்று அளித்து நில எடுப்பு மற்றும் நில மாற்று பணிகளை துரிதப் படுத்தலாம். மேலும் அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்ட இனங்களில், இதற்கென அலுவலர்களை நியமித்து இந்த நடவடிக்கைகளை காலதாமதம் நேராதவாறு கண்காணித்துக் கொள்ள வேண்டும். தனியார் நில எடுப்பு செய்ய வேண்டியிருந்தால் அதற்குரிய வழிமுறைகளை பின்பற்றி தனியார் பேச்சு வார்த்தை மூலமோ அல்லது நில எடுப்பு வழிமுறையிலோ நிலத்தை கையகப்படுத்த வேண்டும். கிராமத்தை தேர்வு செய்த மூன்று மாத காலத்திற்குள் உட்பிரிவுகள் செய்து பட்டா வழங்கப்படல் வேண்டும். தனியார் நில எடுப்பு செய்யப்படும்போது, இம்மாதிரியான நிலங்களுக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

## 6. SAMATHUVAPURAM

**1.3.** வீட்டு மனை உட்பிரிவு செய்தல்

தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டு விதிமுறைகளின்படி சமத்துவபுர கட்டுமான பணிக்கென ஒப்படைக்கப்பட்ட பின்னர், நகர் மற்றும் ஊரமைப்புத் துறை மூலமாக இதற்கான வரைபடம் ஒப்புதல் பெறப்பட்ட பின்பே கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட வேண்டும். வரைபடத்தில் வீடுகள், சாலைகள் , உள்கட்டமைப்புகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் ஆகியவைகள் முறையாக ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். வரைபடம் அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டால், மாவட்ட அளவில் உள்ள உதவி இயக்குநருடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியை துரிதமாகப் பெற வேண்டும்.

**1.4.** பயனாளிகள் தேர்வு

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் அமைக்கப்படவுள்ள **100** வீடுகளுக்கான பயனாளிகள் தேர்வு முடிவடைந்த பின்னரே வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படல் வேண்டும். சமத்துவபுரங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு வருமான உச்ச வரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. எனினும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கே முன்னுரிமை தந்து தேர்ந்தெடுக்கப்படலாம். இப்பணிகளில் பயனாளிகளே முன்னின்று ஈடுபடும் வகையில் நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போதே சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராமங்களிலிருந்து தகுதியுள்ள பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் பணிகளைத் துவக்கலாம். ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகியவை பயனாளிகள் தேர்வில் சம்பந்தப்பட்டுள்ளதால் பயனாளிகள் தேர்வு செய்யும் பொறுப்பு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் பொறுப்பாகும்.

| | | |
|---|---|---|
| தலைவர் | – | மாவட்ட வருவாய் அலுவலர் |
| உறுப்பினர்கள் | – | கோட்டாட்சியர் |
| | – | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| | – | மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் |
| | – | வட்டாட்சியர் |
| | – | ஊராட்சி ஒன்றிய ஆணையர் (வட்டார பஞ்சாயத்து) |

பயனாளிகள் பட்டியல் தயாரிக்கும் முன் இதற்கென துணை ஆட்சியர் / உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்களை நியமித்து, வரப்பெற்ற விண்ணப்பங்களை கிராமவாரியாக வட்டாட்சியர் உதவியுடன் விசாரணை செய்து, இலவச வீட்டு மனையைப் பெற அடிப்படைத் தகுதியுள்ள நபர்களின் பட்டியலை முன்னுரிமை அடிப்படையில் தயார் செய்ய வேண்டும். இப் பட்டியலை குழு அங்கீகரித்தப் பின் வெளிப்படையான முறையில் ஒளிவுமறைவில்லாமல் கிராம சபையில் வெளியிட்டு இறுதி செய்யப்பட வேண்டும். இத் தேர்வு குறித்து அரசு ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் (நி.எ.**2**) நலத் துறை எண் **4593**/நி.எ.**2**/**99**/**1** நாள் **25.2.99**–இல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் பட்டாக்கள் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் என்பதால் ஆதிதிராவிடர் நலத்துறை மறறும் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் துறைகளின் வழிமுறை ஆணைகளின்படி தகுதியானவர்களுக்கு மட்டுமே பட்டாக்கள் வழங்கப்படல் வேண்டும். சமத்துவப்புரத்தில் வசிப்பதற்காகத் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கிடையே சமத்துவத்தைப் போற்றக்கூடிய மனப்பக்குவம் இருத்தல் அவசியம். ஆதிதிராவிடர்/பிற்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/ இதர வகுப்பினர் ஆகிய பிரிவினருக்கு முறையே ஒதுக்கப்பட்ட **40, 25,25** மற்றும் **10** வீடுகளில் இப்பகுதியில் உள்ள அனைத்து சாதியினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் அளித்து பயனாளிகள் தேர்வு செய்யப்படல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு, விதிமுறைகளின்படி, பயனாளிகள் ஒதுக்கீடு கணக்கிடப்படும் நிலையில், அதற்கும் மேற்பட்ட பல தகுதியுள்ள பயனாளிகள் இருந்தால், அத்தகைய இனங்களில் ஒதுக்கீட்டின் அடிப்படையில் பயனாளிகளை, முன்னரே அறிவிக்கப்பட்ட பொது இடம் , நாள் மற்றும் காலத்தில் தேர்வு செய்வதற்கு, குலுக்கல் முறையைக் கையாளலாம்.

**1)** சமத்துவபுரத்திற்கான இடங்கள், கிராமங்களையொட்டித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். நகரங்களுக்கு அருகில் இடம் தேர்ந்தெடுக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். எனவே, சமத்துவபுரத்தை உருவாக்க ஒரு இடத்தை தேர்வு செய்த பின்னர், அவ்விடத்தை மையமாகக் கொண்டு, அதிலிருந்து **10** அல்லது **15** கிலோ மீட்டர் சுற்றுவட்டத்தில் உள்ள மக்களிடமிருந்து மட்டும் மனுக்களைப் பெற்றால் போதுமானதாக இருக்கும். அவ்வாறு இல்லாத சூழ்நிலையில் இதற்கும் மேலான சுற்றுவட்டத்தில் உள்ள மக்களிடமிருந்து மனுக்களைப் பெறலாம்.

**2)** நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் வரப்பெறும் விண்ணப்பங்களை கிராம வாரியாக, இட ஒக்கீடு நிர்ணயப்படி தேர்வு செய்ய வசதியாக சமுதாய வாரியாக வகைப்படுத்தி பிரித்து வைத்தல் வேண்டும்.

**3)** சமத்துவபுரத்தில் அனைத்து தரப்பினரும் குடியிருக்க ஆதிதிராவிடர் **:** பிற்பட்டோர் **:** மிகவும் பிற்பட்டோர் **:** இதர இனத்தவருக்கு **40 : 25 : 25 : 10** என்ற விகிதத்தில் அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், அனைத்து

சாதி மக்களிலிருந்தும் பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கு வசதியாக அருகாமையிலுள்ள கிராமங்களிலுள்ள அனைத்துக் குடியிருப்புகளின் எண்ணிக்கையையும் கணக்கெடுத்து, மேற்குறிப்பிட்ட நான்கு பிரிவுகளுக்குள் அப்பகுதியில் உள்ள அனைத்து சாதியினரும் பங்கு பெறுவதற்கு வசதியாக ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

4) சமத்துவபுரத்தில் வீடு கோரி விண்ணப்பித்த மனுதாரர்களின் தகுதியை அறிய, பயனாளிகளைத் தேர்வு செய்யும் குழுவில் துணை ஆட்சியர் மற்றும் உதவி இயக்குநர் நிலை அலுவலர்களை நியமித்து, தனித்தனியே சில கிராமங்களை அவர்களுக்கு ஒதுக்கி, அக்கிராமங்களிலிருந்து பெறப்பட்ட மனுக்கள் அக்கிராமத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள சமுதாய வாரியான பயனாளிகள் எண்ணிக்கை ஆகிய விபரங்களை அளித்து, அவர்கள் கிராமங்களுக்குச் சென்று நேரடியாக விசாரணை நடத்தி, மக்கள் முன்னிலையில் தகுதியான பயனாளியைத் தேர்வு செய்ய வேண்டும்.

5) ஒரு கிராமத்தில் ஒரு சமுதாயத்துக்கு ஒரு வீடு மட்டுமே ஒதுக்கப்பட்ட நிலையில் அச்சமுதாயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தகுதியான பயனாளிகள் அக்கிராமத்தில் இருக்கும் நிலையில், பொதுமக்கள் முன்னிலையில், அதாவது கிராம சபையில் குலுக்கல் முறையைப் பின்பற்றி பயனாளியைத் தேர்ந்தெடுக்கலாம்.

6) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (நிஎ4) துறை அரசாணை (நிலை) எண்.171 நாள் 22.10.97–இல் குறிப்பிடப்பட்ட விகித அடிப்படையில்தான் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் மற்றவர்களிடமிருந்து போதிய விண்ணப்பங்கள் பெறப்படாத நிலை எழும்போது, மாவட்ட ஆட்சியர் அதை நன்கு உறுதி செய்த பின்புதான் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

7) பின்வரும் பத்தி 1.5–இல் தெரிவித்துள்ளபடி, ஒவ்வொரு பிரிவினருக்குமான வீட்டுமனையின் எண்ணை சுழற்சி அடிப்படையில் நிர்ணயித்த பிறகு ஆதிதிராவிடர்/பிற்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/இதர வகுப்பினர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த ஒவ்வொரு பயனாளியும் அவர் குடியிருக்கும் வீட்டு எண்ணை அவரே குலுக்கல் முறையில் தேர்வு செய்யும் வகையில் செயல்படலாம் சமத்துவபுரத்தில் குடியிருக்கத் தகுதியான, தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் அனைவரது கூட்டத்தையும் கூட்டி, ஒவ்வொரு பயனாளியும் அப்பிரிவினருக்கென ஒதுக்கப்பட்ட வீடுகள் எண்ணிக்கையிலிருந்து குலுக்கல் முறையில் தனக்குரிய வீட்டுமனை எண்ணைத் தேர்வு செய்யலாம்.

8) சமத்துவபுரத்தில் வசிக்கத் தகுதியுள்ள பயனாளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிந்த பின்னர் ஏற்கனவே ஒப்புக் கொண்ட நிபந்தனைகளின்படி, பயனாளிகள் சமத்துவபுரத்தில் நிரந்தரமாகக் குடியேற வேண்டும். அவ்வாறு குடியேறத் தவறும் பயனாளிகளின் பட்டாக்களை நிபந்தனை மீறல் காரணமாக ரத்து செய்து, அந்த ஒதுக்கீட்டில் எந்தப் பிரிவினருக்கு வழங்க வேண்டுமோ அந்தப் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு மட்டுமே தகுதியின் அடிப்படையில் வழங்குதல் வேண்டும். ஆனால், இத்தகைய நடவடிக்கையைத் தவிர்க்கும் பொருட்டு பயனாளிகளைத் தேர்வு செய்யும் ஆரம்ப நிலையிலேயே தீவிர விசாரணைக்குப் பின் சமத்துவபுரத்தில் நிரந்தரமாகக் குடியேறக்கூடிய தகுதியுள்ள பயனாளிகளையே தேர்வு செய்ய வேண்டும்.

1.5. பயனாளிகளுக்கு பட்டா வழங்குதல்

பயனாளிகளே முன்னின்று கட்டுமானப் பணிகளை மேற்கொண்டால்தான் பயனாளிகளுக்கு இதில் ஈடுபாடு ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், கட்டுமானப் பணியும் தரமுள்ளதாக அமையும். எனவே கட்டுமானப் பணிகளைத் துவக்குவதற்கும் முன்பாகவே பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படல் வேண்டும். வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்படுவதால், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் அரசு விதிமுறைகளின்படி இலவச வீட்டுமனைப் பட்டா பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இதனை உறுதியாகக் கடைபிடிப்பதன் மூலம் தகுதியற்றவர்கள் சமத்துவபுரத்தில் பயனாளிகளாகத் தேர்வு செய்யப்படுவதைத் தவிர்க்க இயலும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நி.எ.4. துறை அரசாணை நிலை எண்.171 நாள் 22.10.97 பத்தி 3–7ல் அறிவுறுத்தப்பட்டவாறு வீட்டுமனைக்கான பட்டாக்கள் வழங்கும்போது அனைத்து சாதியினரும் ஒருங்கிணைந்து வாழும் வகையில் பட்டாக்கள் பின்னிப்பிணைந்து வழங்கப்பட வேண்டும். ஒரே இனத்தவர் வசிக்கும் வீடுகள், ஒரே வரிசையாக அமைவது தவிர்க்கப்பட்டு, பல்வகையினரும் அடுத்தடுத்து வாழும் சூழலும் உருவாக்கப்பட வேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு சுழற்சிப் பட்டியல் தயாரித்து, அதனடிப்படையில் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கலாம். எடுத்துக்காட்டாக, முதல் 20 வீடுகளை எடுத்துக் கொண்டால் வரிசை எண்.2,4,7,10,12,14,17,20 ஆகியவற்றைக் கொண்ட வீட்டுமனைப் பட்டாக்களை ஆதிதிராவிடர்களுக்கு வழங்குவதன் மூலமும், வ.எண். 1,5,9,11,15 ஆகியவற்றைக் கொண்ட வீட்டு மனைப் பட்டாக்களை பிற்பட்ட வகுப்பினருக்கு வழங்குவதன் மூலமும் வ.எண்.3,6,13,16,19 ஆகியவற்றைக்கொண்ட வீட்டுமனைப் பட்டாக்களை மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு வழங்குவதன் மூலமும், வரிசை எண் 8, 18 ஆகியவற்றைக் கொண்ட வீட்டு மனைப் பட்டாக்களை இதர வகுப்பினருக்கு வழங்குவதன் மூலமும் அனைத்து சாதியினரது வீடுகளும், கலந்து அமையுமாறு செய்யலாம்.

## 6. SAMATHUVAPURAM

| வரிசை எண் | இனம் |
|---|---|
| 1 | பிற்பட்டோர் |
| 2 | ஆதி திராவிடர் |
| 3 | மிகவும் பிற்பட்டோர் |
| 4 | ஆதிதிராவிடர் |
| 5 | பிற்பட்டோர் |
| 6 | மிகவும் பிற்பட்டோர் |
| 7 | ஆதி திராவிடர் |
| 8 | இதர இனத்தவர் |
| 9 | பிற்பட்டோர் |
| 10 | ஆதி திராவிடர் |
| 11 | பிற்பட்டோர் |
| 12 | ஆதி திராவிடர் |
| 13 | மிகவும் பிற்பட்டோர் |
| 14 | ஆதி திராவிடர் |
| 15 | பிற்பட்டோர் |
| 16 | மிகவும் பிற்பட்டோர் |
| 17 | ஆதி திராவிடர் |
| 18 | இதர வகுப்பினர் |
| 19 | மிகவும் பிற்பட்டோர் |
| 20 | ஆதி திராவிடர் |

சமத்துவபுரப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் பட்டா இலவசப் பட்டாவாகவும் மற்றும் சமத்துவபுர வீடுகளுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகளுடன் கூடிய பட்டாவாகவும் இருத்தல் வேண்டும். சமத்துவபுரத்தில் கடைப்பிடிக்க வேண்டுமென்று விதிக்கப்படும் நிபந்தனைகளை மீறும் நிலையில் பட்டா ரத்து செய்யப்படும் என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

தற்போது கீழ்க்கண்ட நிபந்தனைப் படிவம் நடைமுறையில் உள்ளது.

**பயனாளிகளின் உறுதி மொழி**

- சமத்துவபுரத்தில் குடிபுகும் நான், சாதி சமயப் பாகுபாடில்லாமல் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் இருப்பேன்.
- சமத்துவபுரத்தில் குடிபுகும் நான், சமத்துவபுர சமுதாயக் கூடத்தில் வழிபாடு, திருமணம் போன்ற சடங்குகளைச் செய்து கொள்வேன். ஒவ்வொரு சாதிக்கும் மதத்திற்கும் பொது இடத்தில் வழிபாட்டுத் தலங்கள் தனித்தனியாக அமைத்துக்கொள்ள மாட்டேன்.
- என் இல்லத்தில் இறப்பு நேரிட்டால், சடலங்களைப் புதைக்க விரும்பினால், சமத்துவபுரத்தின் பொது இடுகாட்டினையும், எரிக்க விரும்பினால் பொது சுடுகாட்டினையும் பயன்படுத்திக் கொள்வேன். ஆக ஒரு இடுகாடு, ஒரு சுடுகாடு என்ற வழிமுறையினைக் கடைபிடிப்பேன்.
- சாதி, சமயத் தலைவர் சிலைகளைச் சமத்துவபுரத்தில் வைக்க முயற்சிக்கவோ, சம்மதிக்கவோ அல்லது அனுமதிக்கவோ மாட்டேன்.

## 6. SAMATHUVAPURAM

- சமத்துவபுரத்தில் குடிபுகுவோர், ஒவ்வொரு சாதியும், மாறி மாறி உதாரணமாக முதலாவதாக ஒரு ஆதிதிராவிடர், இரண்டாவது ஒரு பிற்பட்ட வகுப்பினர் மூன்றாவது மிகவும் பிற்பட்ட வகுப்பினர், நான்காவது ஒரு ஆதிதிராவிடர் எனக் குடியிருக்க வேண்டும் என்பதனை அறிவேன். குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்யும்பொழுது இதுபோன்ற ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

- சமத்துவபுரத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட 5 சென்ட் நிலத்தையும், அதில் கட்டப்பட்ட வீட்டினையும் எவருக்கும் அடமானமோ விற்பனையோ செய்யமாட்டேன்.

- எனக்கு ஒதுக்கீடு செய்யப்படும் வீட்டில் நானே குடியிருப்பேன். வேறு ஒருவருக்கும் வாடகைக்கு விடவோ அல்லது வேறு எவ்வகையிலேனும் வில்லங்கப்படுத்தவோ மாட்டேன்.

- சமத்துவபுரத்தைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்வேன்.

- எனக்கு ஒதுக்கப்பட்ட மனையிடத்தில் குறைந்தது இரண்டு மரங்களையேனும் வளர்ப்பேன்.

- சமத்துவபுரத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பொது இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பு செய்யமாட்டேன். வேறு எவரையும் ஆக்கிரமிப்பு செய்யவும் அனுமதிக்க மாட்டேன்.

- சமத்துவபுரத்தில் குடிநீர், பூங்கா, தொலைக்காட்சி போன்ற பொது வசதிகளைப் பயன்படுத்துவதில் சாதி, மத வேறுபாடின்றிப் பயன்படுத்திக்கொள்வேன்.